

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து தூத்துக்குடி அண்ணா பேருந்து நிலையம் முன்பு முன்னாள் அமைச்சரும், வடக்கு மாவட்ட திமுக செயலாளருமான கீதாஜீவன் தலைமையில் 300க்கு மேற்பட்ட தி.மு.க.வினர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு கைதாகினர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 8-ஆம் ஆண்டு நினைவு நாள்!

# தேனி தெற்கு மாவட்டக் கழகத்தினர் புகழஞ்சலி!

## மாவட்டச் செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் அறிக்கை!

தேனி, ஆக. 6 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு நாளை யொட்டி தேனி தெற்கு மாவட்டத்தில் புகழஞ்சலி செலுத்தப்படுகிறது. எனவே மாவட்டக் கழகத்தினர் இந்நிகழ்ச்சியில் திரளாகப் பங்கேற்குமாறு மாவட்டக் கழகச் செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் கேட்டுக் கொண்டுள்ளார்.



இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

2026 ஆகஸ்ட் 7 வெள்ளிக்கிழமை நீங்கா புகழ் பெற்ற மறைந்தும், மறையாமலும் தமிழர்களின் நெஞ்சங்களில் எல்லாம் மங்காமல், மறையாமல் நீக்கமற நிறைந்து இருக்கின்ற தமிழினத்தலைவர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாள்.

தமிழ் இனம் காத்திட, மொழி காத்திட, தன் சுவாசக்காற்று முழுமையாக நிறுத்திக் கொண்ட காலம் வரைக்கும், மெழுகுவர்த்தியாய் தன்னை அர்பணித்துக் கொண்டவர்.தமிழுக்கு செம்மொழி எனும் உயர் தகுதியைப் பெற்றுத் தந்தவர்.

ஐந்து முறை முதலமைச்சராக இருந்து காவிரிப்பிரச்சினைக்கு நடுவர் மன்றம் கண்டு, உச்சநீதிமன்றத்தின் நல்லதொரு தீர்ப்பை பெற்று தமிழகத்திற்கு 177.25 TMC தண்ணீர் பெற்று காவிரி டெல்டா பகுதி விவசாயிகளின் கண்ணீர் துடைத்தவர்.

இலவச மின்சாரம், 7000 கோடி விவசாய பயிர் கடன் இரத்து செய்து, வட்டி இல்லாக்கடன் விவசாயி களுக்கு வழங்கி, தமிழகத்தில் பசுமை புரட்சி கண்டவர்.

50 ஆண்டுகளுக்கு மேலாக திராவிட முன்னேற்றக் கழகத்தலைவராக இருந்து, அரசியல் சூறாவளி, பூகம்பம், மிசா போன்ற நெருக்கடிகள் கழகத்தை சூழ்நதபோது எதிர்த்து நின்று நம் இயக்கத்தை எக்கு கோட்டையாக மாற்றியவர்.

தொலைநோக்கு சிந்தனை கொண்ட டாக்டர் கலைஞர் அவர்களுக்கு 8 ஆம் ஆண்டு நினைவு நாள். ஆகஸ்ட் 7ல், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைச் செயலாளர்கள், தொண்டர்கள் சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் சார்பு அணி தொண்டர்களும், தங்கள் இல்லங்களில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலையிட்டு மலர் தூவி புகழஞ்சலி செலுத்திட வேண்டுகின்றேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கைது செய்ததைக் கண்டித்து தேனி தெற்கு மாவட்டம் கம்பத்தில் முன்னாள் எம்.எல்.ஏ. தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் தலைமையில் த.வெ.க. அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. உடன் நகரச் செயலாளர்கள் வீரபாண்டியன் பால்பாண்டி ராஜா முன்னாள் ஒன்றிய செயலாளர் சூர்யா தங்கராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கைது செய்ததைக் கண்டித்து நெல்லை கிழக்கு மாவட்டம் வள்ளியூரில் மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில் சாலை மறியலில் ஈடுபட்ட அனைவரும் கைது செய்யப்பட்டனர்.



மதுரை வடக்கு மாவட்டம் வாடிப்பட்டி பேரூர் தி.மு.க. சார்பில் கழக இளைஞரணி செயலாளர், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கைது செய்ததைக் கண்டித்து முன்னாள் பேரூர் செயலாளர் மு.பா.பிரகாஷ் தலைமையில் வாடிப்பட்டி அண்ணா பேருந்து நிலைய முன்பாக சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட கழக நிர்வாகிகள் விவசாய அணி பாஸ்கரன், இளைஞர் அணி சசிக்குமார், விநோத், திரவியம், கண்ணன், சிதம்பரம், பன்னீர் செல்வம், எம்.எஸ்.முரளி, அரவிந்தன், ராம் மோகன், ராஜசேகரன், ஆறுமுகம், மருது பாண்டியன், பாலமுருகன், ஜெகதீசன், கொரியர் சிவா உள்ளிட்ட கழகத்தினரை காவல்துறையினர் வலுக்கட்டாயமாக கைது செய்தனர்.





தமிழ்நாடு சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் மாநில கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் கைதை கண்டித்து இராமநாதபுரம் மாவட்டம் முழுவதும் பஸ் மறியல் போராட்டம் நடைபெற்றது. அதில் பரமக்குடி நகரில் உள்ள ஐந்து முனை சந்திப்பில் தற்குறி த.வெ.க. அரசைக் கண்டித்து சாலை மறியலில் ஈடுபட்டனர். நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி தலைமையில் நகர் செயலாளர் ஜீவரத்தினம் மாவட்ட துணைச் செயலாளர் கருப்பையா மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சன் சம்பத்குமார், குமரகுரு, ஒன்றிய கழகச் செயலாளர்கள் ஜெயக்குமார், அண்ணாமலை, சக்தி, கிருஷ்ணமூர்த்தி மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் நகர் கழக துணைச் செயலாளர் மும்மூர்த்தி,முன்னாள் மாணவர் அணி நகர் அமைப்பாளர் மகேந்திரன் உட்பட கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### நெல்லை கிழக்கு மாவட்டத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 8 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

## மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் அறிக்கை!

நெல்லை, ஆக.6 –

நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி,கழக துணை பொதுச் செயலாளர்,கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் வழிகாட்டுதலின்படி, முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர் களின் 8ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நாளை (07.08.2026) நெல்லை கிழக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் கழகங்கள் சார்பில் நாங்குநேரி மேற்கு ஒன்றியம் சார்பில் நாங்குநேரி,நாங்குநேரி கிழக்கு ஒன்றிய சார்பில் பரப்பாடி, களக்காடு வடக்கு ஒன்றியம் சார்பில் தேவநல்லூர், பத்மநேரி, களக்காடு தெற்கு ஒன்றிய சார்பில் டோனாவூர், பாளையங்கோட்டை தெற்கு ஒன்றியம் சார்பில் ரெட்டியார்பட்டி, பாளையங் கோட்டை மத்திய ஒன்றியம் சார்பில் கிருஷ்ணா புரம், பாளையங்கோட்டை வடக்கு ஒன்றியம் சார்பில் கேடிசிநகர், இராதாபுரம் மேற்கு ஒன்றியம் சார்பில் கள்ளிகுளம், சமூகரெங்கபுரம்,இராதாபுரம், இராதாபுரம் தெற்கு ஒன்றியம் சார்பில் நவ்வலடி, கூடங்குளம், பரதர் உவரி, வள்ளியூர் வடக்கு ஒன்றியம் சார்பில் லெப்பைகுடியிருப்பு, வள்ளியூர் தெற்கு ஒன்றியம் சார்பில் செட்டிகுளம், ஊரல்வாய்மொழி, களக்காடு நகரம் சார்பில் களக்காடு அண்ணா சிலை முன்பு, ஏர்வாடி பேரூர் சார்பில் பேரூர் கழக அலுவலகம் முன்பு, திருக்குறுங்குடி பேரூர் சார்பில் திருக்குறுங்குடி காவல்நிலையம் அருகில், நாங்குநேரி பேரூர் சார்பில் நாங்குநேரி நாலுமுக்கு சாலை சந்திப்பு, மூலைக்கரைப்பட்டி பேரூர் சார்பில் மூலைக்கரைப்பட்டி பேருந்து நிலையம் அருகில்,வள்ளியூர் பேரூர் சார்பில் வள்ளியூர் பழைய பேருந்து நிலையம், பணகுடி பேரூர் சார்பில் பணகுடி பேருந்துநிலையம்,திசையன்விளை பேரூர் சார்பில் திசையன்விளை பழைய பேருந்து நிலையம் மற்றும் அனைத்து கிளை கழகங்களிலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு புகழஞ்சலி செலுத்தி, ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்டங்கள் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.



சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கைதைக் கண்டித்து தென்காசியில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் மறியலில் ஈடுபட்ட அனைவரும் கைது செய்யப்பட்டனர்.



விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்கண்டேயனுக்கு சென்னை உயர் நீதிமன்றத்தில் ஜாமீன் கிடைத்ததை கொண்டாடும் வகையில் புதூர் பேருந்து நிலையம் முன்பு ஒன்றிய செயலாளர்கள் செல்வராஜ், புதூர் கிழக்கு இராதாகிருஷ்ணன், புதூர் மேற்கு ஆகியோர் தலைமையில் கட்சி நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் பட்டாசு வெடித்து கொண்டாடினர்.



எதிர்க்கட்சித் தலைவர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கைது செய்ததைக் கண்டித்து சங்கரன்கோவிலில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் சாலை மறியலில் ஈடுபட்ட அனைவரும் கைது செய்யப்பட்டனர்.